NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 28 June 2023

# குடியேறிகளை ஒன்றிணைத்து நாட்டின் பன்முகத்தன்மையைக்காக்க வேண்டும்: அதிபர் ஹலிமா

பல இன மக்களை ஒன்றிணைத்துப் பொதுவான தேசிய அடையாளத்தை உருவாக்க சிங்கப்பூர் இடைவிடாது முயற்சி மேற்கொண்டுவருகிறது. ஆனால் தற்போதுள்ள கட்டமைப்பு இன்னும் அதற்குப் பொருத்தமாக இருக்கிறதா என்பதை சோதித்து மறுஆய்வு செய்ய வேண்டும் என்று அதிபர் ஹலிமா யாக்கோப் கூறியுள்ளார்.


கொள்கை ஆய்வுக் கழகத்தின் 35ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி திங்கள்கிழமை செயின்ட் ரெஜிசில் நடைபெற்ற விருந்து நிகழ்ச்சியில் அவர் உரையாற்றினார்.

சிங்கப்பூருக்குப் புதிதாக வருவோரில் பெரும்பாலானோர் சிங்கப்பூரர்களுடன் நட்பாகப் பழகுவது அவசியம் என்று கருதுவதில்லை. அவர்கள் தங்களின் சொந்த சமூக வட்டங்களில் பழகுவதையே விரும்புகின்றனர். இது மிகவும் கவலைக்குரிய அம்சம் என்று அதிபர் கூறினார்.

பல்லின சமூகத்திற்கு ஏற்படும் நுட்பமான அச்சுறுத்தல்கள் குறித்து சிங்கப்பூர் விழிப்புடன் இருக்கவேண்டும். ஏனெனில் காலப்போக்கில் நாட்டின் ஒற்றுமையும் நிலைத்தன்மையும் அதனால் பாதிக்கப்படக்கூடும் என்று திருவாட்டி ஹலிமா எச்சரித்தார்.

"சிங்கப்பூரில் புதிதாகக் குடியேறுபவர்கள் அவர்களின் நிபுணத்துவம், திறன்கள் மூலம் பங்களிக்கின்றனர். சிங்கப்பூர் பொருளாதார ரீதியில் போட்டித்திறன் மிக்க நாடாக விளங்க அது உதவுகிறது. இருப்பினும் அவர்கள் இந்தச் சிறிய தீவில் உள்ளூர் மக்களுடன் சமூக ரீதியாக ஒருங்கிணைந்து வாழ்வது மிகவும் முக்கியம்," என்று அதிபர் சொன்னார்.

சிங்கப்பூர் சமூகத்தில் தாங்களும் ஒரு பகுதி என்று அவர்கள் உணர வேண்டும் என்று கூறிய அவர், சிங்கப்பூரில் வேறுபட்ட சமூக மக்களை ஏற்றுக்கொண்டு ஒன்றிணைந்து வாழும் பழக்கத்தை நாம் கடைப்பிடிக்கிறோம் என்பதைச் சுட்டினார்.



கொள்கை ஆய்வுக் கழகத்தின் 35ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி நடந்த விருந்து நிகழ்ச்சியில் அதிபர் ஹலிமா யாக்கோப் உரையாற்றினார். **படம் : ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.